
# The Bible Standard

(தமிழ் வெளியீடு)



"உமது வெளிச்சத்தையும், உமது சத்தியத்தையும் அனுப்பியருளும். அவைகள் என்னை நடத்தும்." சங். 43:3

**"LIFT UP A STANDARD FOR THE PEOPLE"**
**Isaiah 62 : 10**

Translated from BS 886
Published on Mar 1, 2015

பொருளடக்கம்

**நீதிமானாக்கப்படுதல்** ........... 2

கேள்வி – பதில் ............ 12

BS Tamil Version - 28 2015

# நீதிமானாக்கப்படுதல்

## தேவனுடைய ஜனங்களுக்கு சமாதானத்தைக் கொண்டு வருகிறது

JUSTIFICATION BRINGS PEACE TO GOD'S PEOPLE

**"இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்."** ரோம. 5 : 1




**ரோம. 5 : 1** – ஆம் வசனத்துக்கும், யேகோவா தேவனுக்கு இனி ஒரு போதும் விரோதியாக இராதபடிக்கு அதில் காணப்படும் அவருடைய அழைப்புக்கும் நாம் யாவரும் நன்கு அறிமுகமானவர்களே. ஆயினும் தேவனுடைய பிள்ளைகள் எல்லா ராலும் அதிக தெளிவாக அதன் முழுமையான கருத்து புரிந்து கொள் ளப்பட வேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோம். இது அவர்கள் அனைவருடைய சந்தோஷத்திற்கும், தொடர்ச்சியான களிகூருதலுக்கும் ஒரு ஆதாரமாக இருக்கும். ஏனெனில் இது, தேவனுடைய வார்த்தையின் போதனைகள் அசையாதபடி, பாதுகாப்பாக அமைந்திருக்கிற உறுதியான அசைக்க முடியாத ஒரு அஸ்திபாரமாயிருக்கிறது. அதிலிருந்து எவ்வித கொள்கையின் காற்றினாலும் அசைக்கப்பட முடியாதவாறு நம்முடைய விசுவாச கட்டிடம் இருக்கிறது.

"ஜஸ்டிஃபிக்கேஷன்" (JUSTIFICATION - நீதிமானாக்கப்படுதல்) என்னும் வார்த்தைக்கு இரண்டு அர்த்தங்கள் உள்ளன; ஒன்று ஒரு காரியத்தை சரியென்று நிரூபிப்பது, மற்றொன்று ஒரு காரியத்தை சரிப்படுத்துவது – சரியாக்குவது என்பதாகும். வெப்ஸ்டர் சொல்லகராதி JUSTIFY 'ஜஸ்டிஃபை' (சரியென்று நியாயப்படுத்துதல்) – என்ற வார்த்தையை இவ்விதமாக விளக்குகிறது. (1) "நியாயம் அல்லது சட்டம், உண்மை, நீதி அல்லது கடமைக்கு ஒத்திருக்கிறது அல்லது சரியாயிருக்கிறது என்பதை நிரூபிப்பது அல்லது காட்டுவது (2) குற்றத்திலிருந்து விடுவித்து தீர்ப்பு வழங்குதல் – குற்றத்திலிருந்து விடுவித்தல்" என்று விளக்குகிறது. வேத வாக்கியங்களில் இந்த இரண்டு கருத்துகளிலும் இந்த வார்த்தைகள் பயன்படுத்தப் படுகின்றன. முதலாவது விளக்கத்துக்கு எடுத்துக்காட்டாக நம்முடைய பரம பிதாவும் இயேசுவும் நீதியுள்ளவர்கள் என சொல்லப்பட்டுள்ளதைக் கவனிக்கவும்.

பாவங்களிலிருந்து மனந்திரும்புதல் பற்றி போதிக்கப்பட்டபோது, அதை விசுவாசித்த ஜனங்கள், தேவன் நீதிபரர் என்பதை (லூக். 7 : 29) அதாவது தேவன் அவர்களைப் பாவிகள் என்று கடிந்து கொண்டதிலும், தண்டித்ததிலும் நீதியுள்ளவராக இருந்து வந்ததை அவர்கள் ஒப்புக்கொண்டார்கள். தேவனுடைய நடைமுறைகள் நீதியாக இருந்ததாக மெய்ப்பித்துக் காட்டப்பட்டன. இயேசு ஒரு மனுஷனாக நம்மைப் போல எல்லாவிதங்களிலும் (உலகத்தாலும், அவருடைய மாம்சத்தாலும், பிசாசாலும்) பரீட்சிக்கப்பட்டும் அல்லது சோதனைக்குட்படுத்தப்பட்டும் "**பாவமில்லாதவராயிருக்கிறார்**" – "**அவரிடத்தில் பாவமில்லை.**" அவர் "**பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவருமாயிருந்தார்.**"

யேகோவாவே அவருடைய நீதிபதியாயிருந்தார். யேகோவாவே அவரை நீதிமானாக்கினார். அதாவது அவரை நீதியும் நேர்மையும் உள்ளவராகவே இருக்கிறார் என்று நிரூபித்திருப்பதை அறிவித்தார். அவர் நீதியுள்ளவர் என்று நிரூபித்துக் காட்டப்பட்டார் அல்லது நாம் வாசிப்பது போல அவர் "**ஆவியிலே நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார் ................ மகிமையிலே ஏறெடுத்துக்**

COURTESY BY :

THE BIBLE STANDARD -(ISSN: 1556-8555) Publisher, the **Laymen's Home Missionary Movement-Bible Standard Ministries,** 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700, U.S.A. **Editor**, Leon Snyder. Periodicals Postage paid at Kutztown, PA. **Postmaster:** Send address corrections to The Bible Standard, 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700; **Rates**: **One year's subscription** - $ 12.00 (6 issues); single issues-$2.50 each. **Web Site:** *www.biblestandard.com*

**கொள்ளப்பட்டார்.**" (1 தீமோ. 3 : 16 டயக்லாட்). அவர் நமக்காக தம்முடைய கறைதிரையற்ற மனுஷீகத்தை, மரணத்திற்கு – ஆதாமின் பாவத்திற்கான தண்டனைக்கு கிரயம் செலுத்துவதற்காகக் கொடுத்தார். அவருடைய மரணம் அவருடைய சொந்த பாவங்களுக்காக அல்ல, ஆனால் நம்முடைய பாவங்களுக்காக ஏற்பட்டது. "**அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்.**" (1 பேது. 2 : 24). "**யேகோவா** (அவருடைய சித்தத்திற்கு இசைவாக) **நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்.**" "**எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை** (தம்முடைய மனுஷீகத்தை) **ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே.**"

தேவனுடைய பார்வையில் இயேசு எல்லா பாவங்களிலிருந்தும் விடுதலை பெற்றவராக இருந்தார் என்பதற்கான சிறந்த ஆதாரங்களில் ஒன்று, அவர் தம்முடைய மனுஷீகத்தை மீட்கும் பொருளாகக் கொடுத்த போதிலும்கூட, தேவன் நம்முடைய பாவங்களுக்காக இயேசுவின் மனுஷீக பலியை ஏற்றுக் கொண்டு மனித இனத்துக்கு மிகவும் மேலான ஒரு நிலைமையிலுள்ள ஜீவனுக்கென்று இயேசுவை உயர்த்தினார். அவர் ஒரு பாவியாக இருந்திருந்தால், இது முடியாமற்போயிருக்கும், ஏனெனில் தேவனுடைய நியாயப்பிரமாணம் ஒவ்வொரு பாவியையும் மரண ஆக்கினைத் தீர்ப்புக்கு உட்படுத்துகிறது.

இப்போது நீதிமானாக்கப்படுதலின் இரண்டாவது அர்த்தத்தையும் கவனியுங்கள். தவறான ஏதாவ தொன்றை சரியானதாக ஆக்குவது, இந்த கருத்தின்படி சுபாவத்தில் அநீதியுள்ளவர்களும், பாவமுள்ளவர்களு மாயிருக்கிற நமக்கு இந்த வார்த்தை பொருந்துவதா யிருக்கிறது. நீங்கள் என்னுடைய நீதியான பிரமாணங் களை மீறி தவறையும், பாவத்தையும் செய்கிறீர்கள், ஆனால் நான் உங்களை நீதியுள்ளவர்களாக அறிவிப்பேன் என்று தேவன் நியாயத்தை மீறி அறிவிக்க முடியாது. தேவன் நீதியுள்ளவராயிருக்க வேண்டும். நீதி அவருடைய சிங்காசனத்தின் ஆதாரம்; அனைத்தும் அதன்மீதுதான் தாங்கப்பட்டுள்ளது. நாம் அபூரணமும், பாவமும் உள்ளவர்களாக இருந்தால் நம்மை நீதிமான் களாயிருப்பதாக அவரால் சொல்ல முடியாது. நாம் நீதிமான்களாயிருந்தோமானால், அவர் நம்மை பாவிகள் என்று அறிவிக்க முடிந்திருக்காது, அவ்வாறு ஒரு பாவியைப் போன்று நம்மை நடத்தவும் முடியாது.

ஆதாமின் சந்ததியில் ஒருவரும் நீதிமானாக இல்லை – ஒருவர்கூட இல்லை என்பதை நாம் நினைவில் கொள்வோமாக. அதனால் வலியுறுத்துவது என்ன வென்றால், நம்மில் ஒருவரையும் தேவன் நீதிமானாக நியாயப்படுத்த முடியாது! இந்த வார்த்தையின் முதலாவது அர்த்தத்தில் மேலே காணப்படுகிறபடி அவர் நம்மை நீதிமானாக்க முடியாது என்று நாங்கள் பதிலளிக்கிறோம்; ஆனால் தேவனுடைய அன்பும், ஞானமும் திட்டமிட்டதும், அதன் மூலம் அவர் நீதியுள்ளவராகவும், அதோடுகூட இயேசுவில் விசுவாசம் வைத்து அல்லது அவரை ஏற்றுக் கொள்கிற பாவிகளை நீதிமானாக்குகிறதுமான வழி ஒன்றிருக்கிறது. (ரோம. 3 : 26). நம்முடைய நீதிமானாக்கப்படுதல் (வெப்ஸ்டர் அகராதியின்) இரண்டாவது கருத்தில் மேலே விளக்கிக் கூறப்பட்டுள்ளது; அதாவது தேவனுக்கு முன்பாக அநீதியுள்ளவர்களும், பாவமுள்ளவர்களும், ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டவர்களாயிருக்கிற நாம் மற்றொருவரால் நம்முடைய பாவங்களும், குறைபாடுகளும் நிவிர்த்தி செய்யப்பட்டு சரியாக்கப்பட்டவர்களாகிறோம். நம்முடைய கணக்கு மற்றொருவருடைய பூரணத்தால் ரத்து செய்யப்படுகிறது. தேவனுடைய தயவாலும், இயேசுவின் புண்ணியத்தை நம்முடைய குறைகளை ஈடுசெய்ய ஏற்றுக் கொள்வதனாலும், பாவிகளாயிருந்த நாம் நீதிமான் களாக்கப்பட்டோம்.


மனுஷருக்குள்ளே "நீதியுள்ள ஒருவராக" நம் முடைய கர்த்தராகிய இயேசு மட்டுமே இருக்கிறார். மற்றெல்லாருமே சுபாவத்தில் பாவிகளாயிருந்து, ஆதாமிட மிருந்து ஆக்கினைத் தீர்ப்பை பரம்பரையாகப் பெற்றிருக்கிறார்கள். எல்லோருமே அநீதிமான்கள். அநீதியுள்ளவர்களாயிருப்பதால், அவர்கள் யாவரும் மரண தீர்ப்புக்குட்பட்டவர்களாயிருக்கிறார்கள். அசுத்த மானவர்களாயிருப்பதால், எல்லோருமே பரிசுத்தரும், நீதிபரருமான தேவனுடைய ஐக்கியத்திலிருந்தும், உறவி லிருந்தும் விலக்கப்பட்டவர்களாயிருக்கிறார்கள். உலகம் முழுவதும் சாபத்திற்குள்ளாக மரண ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டிருக்கிறது. (ரோம. 5 : 16, 18). "**ஏனெனில் கிறிஸ்துவும் நம்மை தேவனிடத்தில் சேர்க்கும்படி, அநீதியுள்ளவர்களுக்கு** (ஆதாம்) **பதிலாக நீதியுள்ள** (ஒருவர்)**வராய்**" மரித்தார். (1 பேது. 3 : 18). ஆதாம், அவனுடைய அரையிலிருந்த தன்னுடைய சந்ததியோடு தனக்கும் மற்றும் நமக்கும் உரியதுமாகிய இழந்துபோன அந்த நீதியான அல்லது பாவமில்லாத நிலைக்கு நம்மைத் திரும்ப கொண்டு வந்திருப்பதாக எண்ணப் படுவதின் மூலம் நம்மைத் தேவனோடு இசைவுக்கும், ஐக்கியத்திற்கும் கொண்டுவருகிறார். இயேசு நம்மை நீதிமானாக்குகிறவராக ஆகி, எல்லாவற்றிலிருந்தும் நம்மை நீதிமானாக்குகிறார். (அப். 13 : 39). பாவத்தின் தண்டனையிலிருந்து விடுதலையாக்கப்பட்டவர்களா யிருப்பதால், நாம் தேவனுடன் ஐக்கியம் கொள்ளக் கூடியவர்களாகவும், இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனுக்குப் பிரியமான கிரியைகளைச் செய்யவும் முடியும். (1 பேது. 2 : 5).

ஆனால் நீதிமானாக்கப்படுவதற்கு காரணம் அல்லது அடிப்படை என்ன என்று சிலர் கேள்வி எழுப்பலாம். ஒருவர், இது யேகோவாவின் கிருபையால்

மட்டுமேயல்லாமல், நமக்காக மீட்கும் பொருள் செலுத்தப்பட்டிருப்பதால் அல்ல என்று உரிமைபாராட்டி யிருக்கிறார். "**தமது கிருபையினாலே நாம் நீதிமான் களாக்கப்பட்டிருக்கிறோம்**" என்ற தீத்து 3 : 6 ஆம் வசனத்தை மேற்கோள்காட்டுகிறார். இன்னொருவர் நாம், கிருபையினாலும் அல்ல, மீட்கும் பொருளினாலும் அல்ல. ஆனால் விசுவாசத்தினாலேயே நீதிமான்களாக்கப் படுகிறோம் என்று வலியுறுத்தி, "**நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால்**" என்று கூறும் ரோம. 5 : 1- ஐக் குறிப்பிடுகிறார். மீட்கும் பொருளே நீதிமானாக்கப்படுதல் எல்லாவற்றிற்கும் அடிப்படை யாயிருக்கிறது என்று இன்னொருவர் வலியுறுத்துவதுடன் "**இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே** (மரணத் தினாலே) **நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம்**" என்று கூறும் ரோம. 5 : 9-ஐ சுட்டிக்காட்டுகிறார். நீதிமான்களாக்கப்பட மூன்று வழிகள் இருக்கின்றனவா? இல்லை, இயேசு "**நானே வழி ................. என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்.**" (யோவா. 14 : 6) என்று பதிலளிக்கிறார்.

இந்த இயேசுவை விசுவாசிப்பதால் என்ன கிடைக்கும்? ஏன் பேதுருவையோ அல்லது மோசே அல்லது சிம்சோன் அல்லது ஏசாயா அல்லது எரேமியாவையோ விசுவாசிக்கக் கூடாது? இயேசுவை விசுவாசிப்பவர்களைப் போலவே இவர்கள் மீது விசுவாசம் வைப்பவர்களையும் ஏன் தேவன் நீதிமான்களாக்க முடியாது? இயேசுவைப் பற்றி ஏதோ விசேஷமானதும் பிரத்தியேகமானதுமான ஏதேனும் ஒன்று இருக்க வேண்டும். மற்ற போதகர்கள் மற்றும் தீர்க்கதரிசிகளிட மிருந்து வித்தியாசமான ஏதோ ஒன்று, அதனால் தான் நாம் அவரிடத்தில் விசுவாசம் வைப்பதின் மூலம் நீதிமான்களாக்கப்படுகிறோம், மற்றவர்கள் மீது விசுவாசம் வைப்பதால் அல்ல. மேலும், இயேசுவில் விசுவாசம் வைப்பது என்றால் என்ன? இது ஒரு காலத்தில் யூதேயாவில் அப்படிப்பட்ட நபர் ஒருவர் வாழ்ந்து, சிலுவையின் மீது மரித்தார் என்ற உண்மையை ஒத்துக் கொள்வதற்காக மட்டுமா? நிச்சயமாக இல்லை; அநேக தீர்க்கதரிசிகள் யூதேயாவில் இறந்திருக்கின்றனர்; அநேகர் சிலுவைகளின் மீது மரித்திருக்கின்றனர்.

விளக்கமாக அந்த சந்தர்ப்பங்கள் பகுத்தறிந்து கொள்ளப்பட்டால் இந்த வசனங்கள் மிகவும் இசை வுள்ளதாயிருப்பதை அறிந்து கொள்ள முடியும் என்று நாங்கள் ஆலோசனை கூறுகிறோம். யேகோவாவின் கிருபை அல்லது தயவினால்தான் நாம் நீதிமான் களாக்கப்படுகிறோம். ஏனெனில்: விழுந்துபோன மனுக் குலத்தை இரட்சிக்க 'கிருபையானது' முதலாவது அத்திட்டத்தை ஏற்படுத்தியது. நீதிமானாக்கப்படுதலுக்கு யேகோவா தான் மூலகாரணராயிருக்கிறார். (ரோம. 8 : 33). நாமும்கூட விசுவாசத்தால் நீதிமான்களாக்கப்




தேவனுடைய கரங்களைப் பார்க்க முடியாதபோது
அவருடைய இருதயத்தை நம்பு

படுகிறோம்; அதாவது தேவனுடைய கிருபையின் காரணமாயிருக்கும், மீட்கும் பொருளை (ஈடு பலியை) அதன் முழுமையான ஆசீர்வாதத்தை நாம் விசுவா சத்தின் மூலம் உணர்ந்து கொள்வதற்கு முன்பாகவே நாம் பற்றிக் கொண்டிருக்க வேண்டும். விசுவாசம் என்பது நீதிமானாக்கப்படுதலுக்கு காரணமான கருவியாயிருக் கிறது. மீட்கும் பொருளான இயேசுவின் மரணமே அஸ்திபாரமாகவும், விசுவாசத்தினால் உண்டாகும் எல்லா நீதிக்கும் ஆதாரமான போற்றுதலுக்குரிய காரணமாகவும் தேவனுடைய கிருபைக்கு வாய்க்காலாகவும் இருக்கிறது. இந்த மூன்று காரியங்கள்; அதாவது நீதிமானாக்கும் வல்லமையான மீட்கும் பொருளின் மதிப்பு, அதை அருளிய கிருபை, அதனை உரித்தாக்கி கொள்ளுகிற விசுவாசம் இவை அனைத்துமே பவுலினால் அழகாக கூட்டிச் சேர்க்கப்பட்டிருக்கிறது: "**இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக் கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள். கிறிஸ்து இயேசுவினுடைய இரத்தத்தைப் பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் கிருபாதார பலியாக அவரையே ஏற்படுத்தினார்.**" (ரோம. 3 : 24-26).

இயேசு நம்முடைய பாவங்களுக்காக மரித்தார் என்பதே இரகசியம். ஆனால், பாவமே மரணத்திற் கெல்லாம் காரணமாயிருப்பதால், ஏசாயா, எரேமியா, பேதுருவும் மற்றவர்களும் அதைப் போலவே இயேசுவும், பாவத்தின் காரணமாக மரித்தார்கள் என்று யாராவது கருத்து கூறுகிறார்களா? ஆம், அவர்கள் எல்லாரும் பாவத்தின் காரணமாகத்தான் மரித்தார்கள் என்று நாங்கள் பதிலளிக்கிறோம். இயேசுவைத் தவிர மற்றெல்லாரும் பாவத்தில் தங்களுக்கிருந்த பங்கினால் மரித்தனர், ஏனெனில் அவர்கள் ஆக்கினைத் தீர்ப்புக் குட்பட்ட ஆதாமின் வழிவந்தவர்கள், அவர்களுடைய ஜீவன் பாவத்தின் தண்டனையாக பறிமுதல் செய்யப் பட்டது. (ரோம. 5 : 17, 18). இயேசுவைத் தவிர எல்லாருமே பரம்பரை வழியாக சுதந்தரித்துக் கொண்ட

## தேவனுடைய சமாதானம்

தேவனோடு சமாதானம்
தேவனுடனும், மற்றவர்களுடனும் சமாதானம்
ஒப்புரவாகுதல் – சமாதானம் பண்ணுதல்

"இவ்விதமாக நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் **தேவனிடத்தில் சமாதானம்** பெற்றிருக்கிறோம்." (ரோம. 5 : 1).

## தேவனுடைய சமாதானத்தின் இரண்டு பாகங்கள்

தேவ சமாதானம்
தேவன் தம்முடைய சமாதானத்தை நம்மோடுகூட பகிர்ந்து கொள்கிறார்

"எல்லா புத்திக்கும் மேலான **தேவசமாதானம்** உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக் கொள்ளும்." (பிலி. 4 : 7).

**நாம் தேவனோடு சமாதானம் (ஆகாமல்) பெறாமல், தேவ சமாதானத்தை நாம் பெற்றுக் கொள்ளவே முடியாது**

அசுசிகளின் காரணமாக மரிக்கின்றனர். இயேசுவும்கூட பாவத்தின் காரணமாக மரித்தார், ஆனால், பரம்பரை வழிவந்த அசுசிகளாலோ அல்லது தனிப்பட்ட குற்றத்தினாலோ அல்ல. அவருடைய ஜீவன் நேரடியாக தேவனிடமிருந்து வந்தது, அது தண்டனையாகப் பறிமுதல் செய்யப்படவில்லை; ஆனால் அவர் நம்முடைய பாவங்களுக்காக மரித்தார். "**யேகோவா நம்முடைய அக்கிரமங்களையெல்லாம் அவர்மேல் சுமத்தினார்.**" "பாவமே அறியாத அவர் நமக்காக (பாவத்திற்கான பலியாக) பாவநிவாரண பலியானார், நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு அப்படியானார்." (2 கொரி. 5 : 21, டயக்லாட்). விசுவாசிகளை அவர்கள் மூலமாகவோ, அப்போஸ்தலர்கள் அல்லது தீர்க்கதரிசிகள் மூலமாகவோ அல்லாமல் இயேசுவின் மூலமாகவே தேவன் ஏன் நீதிமானாக்குகிறார் என்பது பற்றி நாம் இப்போது காண்கிறோம். வீழ்ச்சியின் தண்டனையாகிய மரணத்திலிருந்து நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழே அல்லது மனுஷருக்குள்ளே ஏன் வேறெந்த நாமமும் கட்டளையிடப்படவில்லை என்றும் நாம் இப்போது பார்க்கிறோம். அது ஏனென்றால் அவர் தம்முடைய பாவமில்லாத, பூரண மனுஷீகத்தை மீட்கும் பொருளாக – நாம் மரணத்தை சுதந்தரித்துக் கொள்ளக் காரணமாயிருந்த ஆதாமின் பறிமுதல் செய்யப்பட்ட ஜீவனுக்கு பிரதிக்கிரயமாகக் கொடுத்தார். (ரோம. 5 : 12; 1 கொரி. 15 : 22).

இயேசுவில் விசுவாசமாயிருப்பது என்றால் என்ன என்று இப்போது நாம் பார்ப்போம். அப்படிப்பட்ட ஒரு மனுஷன் வாழ்ந்தார், மரித்தார் என்பதை விசுவாசிப்பது மட்டுமல்ல, ஆனால் அவர் எல்லா ஆக்கினைத் தீர்ப்பிலிருந்தும் பாவத்திலிருந்தும் விடுவிக்கப்பட்டவராய் வாழ்ந்து, மரித்தார்; தேவனால் நற்சாட்சி பெற்றும், ஏற்றுக் கொள்ளப்பட்டுமிருந்தார்; அத்துடன் நம்முடைய பாவங்களுக்காகவே அவர் மரித்தார். அதனால் நாம் தேவன் எவ்வாறு கிறிஸ்து இயேசுவின் மனுஷீகத்தை தியாக பலியாக ஏற்று விசுவாசிப்பவர்களை நீதியின்படி நீதிமானாக்குகிறார் என்று பார்க்கிறோம். இப்போது பரம்பரை வழிவந்த எல்லா பாவங்களும், ஆதாம் குடும்பத்தின் பலவீனங்களும் எவ்வாறு, மீட்கும் பொருள் கிரயத்தின் அடிப்படையில் மன்னிக்கப்பட முடியும் என்பது பற்றி பார்க்கலாம்.

கிறிஸ்து இயேசுவுக்குள் நீதிமான்களாக்கப்படுகிறவர்கள் அல்லது ஆதாமின் சாபங்களிலிருந்தும் ஆக்கினைத்தீர்ப்புகள் அனைத்திலிருந்தும் விடுவிக்கப்பட்ட யாவரும், தேவனால் பூரணமானவர்களாக எண்ணப்படுகிறார்கள், ஏனெனில், "**கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து ....... நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை.**" என்று (ரோம. 8 : 1)–ல் அவர் சொல்கிறார். மரணத்துக்குள்ளாக்கும் ஆக்கினைத் தீர்ப்பு மற்றெல்லார் மேலும் இருந்தது, இப்போதும் இருக்கிறது. கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்கள், இயேசு தாமே பாவத்தின் தண்டனைக்கான விலையைக் கொடுத்து விட்டதின் காரணமாக, இந்த ஆக்கினைத் தீர்ப்பிலிருந்து தப்பித்துக் கொள்கின்றனர்; அத்துடன் அவருடைய மீட்பு ஒவ்வொருவருக்கும், அவனோ, அவளோ அதைப் பற்றிய அறிவுக்கு வந்து, அதை விசுவாசத்தால் பற்றிக் கொள்ளும்போது அவர்களுக்கும் உபயோகிக்கப்படுகிறது. அதாவது, இயேசுவின் மரணத்தை தங்களுடைய மீட்கும் பொருள் கிரயமாக (ransom - price) அவர்கள் ஏற்றுக் கொண்ட உடனேயே, அவர்களுடைய பாவங்கள் தேவனால் மன்னிக்கப்படுகின்றன. அவருடைய பார்வையில் அவர்கள் ஆக்கினைத் தீர்ப்பிலிருந்து விடுவிக்கப்படுகின்றனர்; முழுமையான, போதுமான மீட்கும் பொருளின் அடிப்படையில், அவருடன் ஐக்கியத்திற்குள்ளாக அவர்கள் ஏற்றுக் கொள்ளப்படுகிறார்கள். தேவனுடைய அருமையான பிள்ளைகள் அனைவரும் இன்னும் அதிக முழுமையாக அவர்கள் நிலைநிற்கிற இந்த ஆசீர்வாதமான உறவுக்குள் வந்து சேர வேண்டும்; அதாவது கிறிஸ்து, "**நம்முடைய பாவங்களுக்காக** (மரணத்திற்கு) **ஒப்புக்கொடுக்கப்பட்டும், நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக எழுப்பப்பட்டும் இருக்கிறார்.**" (ரோம. 4 : 25) என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். மெய்யாகவே நம்முடைய பாடம் சொல்கிறபடி அவர்கள் "**தேவனுடன் சமாதானம்**" பெற்றிருக்கிறார்கள்!

ஒப்பிட்டுப் பார்த்தால், விசுவாசத்தால் நீதிமான்களாக்கப்பட்டவர்கள் ஒரு சிலரே. ஏனெனில் பல்வேறான காரணங்களால், ஒரு சிலர் மட்டுமே தாங்கள் நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம் என்பதை நம்புகிறார்கள். பாவத்தின் நிச்சயத்தையும் எல்லோரும் பாவிகள்,

அதனால் கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரித்தார் என்றும் ஆக்கினைத் தீர்ப்பளிக்கப்பட்ட நிலையிலிருந்து நம்மை மீட்டிருக்கிறார் என்றும் ஏதோ சிலர் விசுவாசிக் கிறார்கள். கிறிஸ்துவின் நீதியே ஆதாமின் எல்லா பாவத்தையும் மூடுகிற போர்வை என்று உணர்ந்து கொள்ள அல்லது ஏற்றுக் கொள்ள இவர்களிடம் குறைவாக இருப்பது விசுவாசமே. (இது ஒரு மோசமான குறைபாடு, ஏனெனில் இது தேவனோடு அவர்கள் முழுமையாக சமாதானம் ஆவதைத் தடுக்கிறது). அப்படிப்பட்டவர்கள் "**விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது**" (எபி. 11 : 6) அல்லது "**தேவனுடன் சமாதானம்** (இளைப்பாறுதல்) **பெற்றிருப்பது**" (ரோம. 5 : 1) கூடாத காரியம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

இந்த பாடத்திற்குப் பொருந்தாத இன்னொரு வகுப்பார், யுனிவர்ஸலிஸ்ட்கள் பிரிவைச் சேர்ந்தவர்கள். இவர்கள், மனிதன் ஒரு பாவி என்றும், அவன் நீதிமா னாக்கப்பட வேண்டியவன் என்றும் பாவிகள் பிதாவினால் எவ்வித நிபந்தனையுமின்றி நீதிமானாக்கப்படுகிறார்கள் என்றும் அத்துடன் எல்லோருமே நித்தியமாக மீட்கப் பட்டிருப்பார்கள் என்றும் உரிமை கோருகிறார்கள். அதாவது தேவன் தமது ஆதியான மரண தண்டனையை ரத்து செய்து விட்டு, தமது மகா பெரிய வல்லமையால் எல்லா பாவிகளையும் பரிசுத்தவான்களாக மாற்றுவார் என்று முடிவாகத் தீர்மானித்திருக்கிறார். ஆனால் இது தேவனுடைய திட்டமாயிருந்திருக்குமானால், நீதி மானாக்கப்படுதல் விசுவாசம் என்னும் நிபந்தனைக் குட்பட்டதாயிருந்திருக்காது. அநீதியுள்ளவர்களுக்காக நீதிமானாகிய இயேசுவின் மரணமும் அவசியப் பட்டிருக்காது. எனவே தேவன் பாவத்தை நிபந்தனை யின்றி மன்னிப்பார் என்பதாக ஒரு இடத்திலும் அவர் சொன்னதாக நாம் காண முடியாதிருக்கும்போது இது வேதாகமத்துக்குப் புறம்பான உபதேசமாயிருப்பது உடனடியாகக் கண்டுகொள்ளப்படுகிறது. இந்த எண்ணத்தை மனதில் கொண்டிருக்கிறவர்கள், விசுவாசம் என்பது இரட்சிப்புக்கு அவசியம் என்றோ அல்லது அது "**நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாக**" வர வேண்டும் என்றோ ஒப்புக் கொள்வதில்லை. இந்த எண்ணத்தைப் பற்றிக் கொண்டிருப்பவர்களுக்கு நம்மு டைய பாடத்தைப் பயன்படுத்த உரிமை இல்லை, ஏனெனில் இது "இயேசு கிறிஸ்து மூலமாக" கிடைக்கும் நீதிமானாக்கப்படுதலைப் (பாவத்திலிருந்து சுத்திகரிக்கப் படுதல்) பற்றி அதாவது, இயேசு நமக்காக செய்த காரியம், நமக்கு நாமே செய்து கொள்ளும்படியான காரியமாயி ராமல், நம்முடைய பாடத்தின் நம்பிக்கை மற்றும் சமாதானத்தின் அஸ்திபாரமாயிருக்கிறது.

அவர்களுடைய எண்ணம் அல்லது கருத்து நிலை தவறு என்பதற்கு மிகச் சரியானதொரு சான்று, யவீருவின் மகள், விதவையின் மகன் மற்றும் லாசரு காரியங்களில் கொடுக்கப்படுகிறது. (மத். 9 : 18, 23-25; லூக். 7 : 11-15; யோவா. 11 : 44). அவர்கள் எல்லோரும் மரித்தார்கள், அவ்வாறாக இந்த கோட்பாட்டின்படி, தங்கள் சொந்த தண்டனைக்குரிய கிரயம் கொடுக்கப்பட்டதால், இயேசு அவர்களை ஜீவனுக்கு மீண்டும் கொண்டு வந்த பிறகு அவர்கள் மரணத்திலிருந்து விடுதலையாகி இருக்க வேண்டும். ஆனால் அவர்கள் அனைவரும் திரும்பவும் மரித்தனர். ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டவர்களின் மரணம் பாவத்திற்கான பரிகாரத்தை ஏற்படுத்தவோ அல்லது அதன் தண்டனையிலிருந்து விடுதலை பெறுவதற்கான உரிமையையோ எவருக்கும் தரவில்லை.

மெய்யாகவே, தேவனுடைய ஞானம் மனுஷ ருக்குப் பைத்தியமாகவும், இந்த உலகத்தின் ஞானம் தேவனுக்கு முன்பாக பைத்தியமாகவும் இருக்கிறது. (1 கொரி. 2 : 14; 3 : 19). அநேக நூற்றாண்டுகளாக மனிதர்கள் தேடிக் கண்டுபிடித்து வருவது என்னவெனில், மனுஷன் ஒழுக்க நெறி பயிற்சியால் மாறுபடும் தன்மை யுடையவன். அது அவனைத் தேவனுடன் ஐக்கியத்துக் குள்ளாக கொண்டுவந்து சேர்க்கும் என்பதை நிரூபிக்க அநேக நூற்றாண்டுகளாக மனிதர்கள் தேடிக் கொண்டி ருக்கிறார்கள்; அல்லது அவன் தன்னுடைய சொந்த பாவங்களுக்கு பிராயசித்தத்தின் மூலமாக அல்லது இப்போது செய்யும் கிரியைகள் வாயிலாக அல்லது மரிப்பதின் மூலமாக சிருஷ்டிகருடைய தயவுக்குள் அவனை மீண்டும் கொண்டுவரும் பொருட்டு திருப்திகரமா னவற்றைச் செய்ய முயற்சிக்கிறான்; ஆனால் அவரோ பாவத்துக்கு எவ்வளவும் சலுகை காட்டி பார்க்கமுடியாதவ ரான பரிசுத்தமுள்ள சிருஷ்டிகர். மற்றவர்கள் தேவனுடைய அன்பைச் சார்ந்து கொண்டு, அவருடைய அளவிடமுடி யாத அன்பு அவருடைய அளவிடமுடியாத உயர்ந்த நீதியைப் புறக்கணித்துவிடும் என்றும் அவருடைய ஆதித் தீர்ப்பை அவரே ரத்து செய்வதற்கு காரணமாக இருப்பார் என்றும் வீணாக நம்பிக்கை கொண்டிருக்கின்றனர்.

இவை, நல்ல கபடமற்ற மனங்களை தவறான வழிக்கு நடத்திச் செல்லும். ஆதலாலும், மனித சுபாவ முள்ள வஞ்சகப் பேச்சுகள் மூலமாக இவர்கள் "**விலை யேறப்பெற்ற தம்முடைய சொந்த இரத்தத்தாலே நம்மை கிரயத்துக்கு கொண்டவராகிய**" இயேசுவை மீட்பராக விசுவாசிக்கும் சிலருடைய விசுவாசத்தை, கவிழ்த்துப் போடுவார்கள். அவர்கள் தேவனுடைய வசனத்தின் சாட்சியை ஒருபோதும் பயனற்றதாக்கவோ, அல்லது தேவனால் அவருடைய வசனத்தைக் கொண்டு போதிக்கப் பட்டவர்களை நிரந்தரமாக வழிதப்பிப்போகச் செய்யவோ முடியாது. இவர்கள் யேகோவாவில், நீதி, அன்பு ஆகிய இரண்டிலுமே நித்தியமான ஒரு தேவனைக் காண்கிறார் கள். "**அவர் மிகுந்த நீதியுள்ளவராதலால், அவர் எந்த வகையிலும் குற்றவாளியைக் குற்றமற்றவனாக** (மன்னித் துவிட) **விட**" மாட்டார் (யாத். 34 : 7) என்ற போதிலும், மிகுந்த அன்புடன், அவர் நம்முடைய பாவங்களுக்காக வும், பாவத்திற்கான தண்டனையாகிய மரணத்திலிருந்தும்

நம்மை மீட்டுக் கொள்ளவும், அவர் தமது ஒரே பேறான குமாரனை நமக்காக மரிக்கும்படி கொடுத்தார். (ரோம. 6 : 23) நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூல மாக (ஆக்கினைத் தீர்ப்பிலிருந்து விடுவிக்கிற) ஆசீர்வாத மான நீதிமானாக்கப்படுதலாகிய வேதாகம உபதேசத்தை விசுவாசத்தினால் ஏற்றுக் கொண்டு, அதில் உறுதி யாய் நிலைத்திருப்போமாக. "**இரத்தஞ்சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது**" ("நீக்குதலோ" அல்லது "நீதிமா னாக்கப்படுதலோ" உண்டாகாது) என்று எழுதப்பட்டிருக் கிறபடி, நாம் இயேசுவை "**அவர் தம்மைத் தாமே பலியாக் கியதால் பாவங்களை நீக்கிப்போடுகிறார்**" என்று விசுவா சிக்கிறோம். (எபி. 9 : 22, 26). கிறிஸ்துவில் நங்கூரமிட் டிருக்கிற நம்மை இந்த "பொல்லாத நாட்களில்" வழி வில கச்செய்கிற சாத்தானுடைய உபதேசமாகிய ஒவ்வொரு காற்றினாலும் அடிப்பட்டு அங்குமிங்கும் அலைக்கழி யாதபடிக்கு யேகோவாவின் வார்த்தையினால் நம்முடைய விசுவாசம் இவ்வாறு தாங்கப்பட்டுள்ளது.

இந்த சமயத்தில், நாம் இந்த பாடத்தை மற்றொரு நோக்கில் பார்ப்போமாக. இயேசு வீணாகவா மரித்தார்? ஒரு விசுவாசிக்கு, "**மனுஷனாகிய கிறிஸ்து இயேசு**" வாழ்ந்து மரித்தார் என்பது விவாதத்துக்கிடமில்லாத ஒரு உண்மையாயிருக்கிறது; ஆனால் ஏன் அவருடைய ஜீவன் மற்றும் மரணத்தின் மதிப்பு அல்லது பயன்பாடு ஆகியவற்றைப் பற்றிய பல்வேறான கருத்துகள் நிலவி வருகின்றன. கிறிஸ்தவமண்டல உலகத்தில் பாதிக்கும் மேற்பட்டோர், இயேசு மற்ற மனிதர்களைப் போலவே அபூரணமான (பாவமுள்ள) மனிதன் என்றும், சாதாரண திறமைக்கும் மேலானது அவரிடம் இருந்தது என்றும் – அவர் வாழ்ந்த நாளில் வாழ்ந்தவர்களைவிட மிகவும் மேலான ஒரு மனுஷனாக ஒழுக்க நெறிமுறைகளின் ஒரு ஆசிரியராக கருதப்படுகிறார். கன்ஃபூசியஸ், சாக்ரடீஸ், மற்றும் பிளாட்டோ ஆகியோருடைய வரிசையில் சரியாக நிறுத்தப்படத்தக்கவரென்றும் ஆனாலும் சிலர் நினைக் கிறபடி கடைசி இரண்டு பேரைக்காட்டிலும் குறைந்த அளவிலான தத்துவ மேதை என்றும்கூட எண்ணப் படுகிறார். அவருடைய மரணத்தை கொடூரத்துக்கும், அநீதிக்கும் குறிப்பிட்டுக் காட்டும்படியாகவும், சத்தியத்தின் கொள்கைகளுக்கு அவர் ஒரு இரத்தசாட்சியாயிருந்தார் என்றும் அவர்கள் மதிக்கின்றனர், என்றபோதிலும் அவர்கள் அதில் எந்த புண்ணியத்தையும் உணர்ந்து கொள்ளவில்லை. வேறு எந்த மனுஷனும் மரிக்கிறது போலவே அவர் மரித்தார், அதுவும் அதே மாதிரியான காரணத்துக்காக என்றும் அவர்கள் சொல்கிறார்கள். எப்படியிருந்தாலும் அதே மனுஷ குடும்பத்தின் ஒரு அங்கத்தினராக, வேறெந்த மனுஷனும் உடனடியாகவோ அல்லது பிந்தியோ, எப்படியோ மரிக்கிறது போலவே அவர் மரித்திருக்கக்கூடும். இயேசுவின் ஜீவன் மற்றும் மரணத்தின் மதிப்பு நீதிநெறிமுறை போதனை, செல் வாக்கு, மனுக்குலத்தாருக்கு அது மிகச்சிறந்த மாதிரியாயிருப்பதில் முழுவதுமாக அடங்கியிருக்கிறது என்றும் அதனால் எல்லா மனிதர்களும் தூய்மையான, நீதி நெறியுள்ள வாழ்க்கை வாழ வேண்டுமென்பதையும் ஜீவனை தியாகம் செய்கிறவர்களாயிருக்க வேண்டும் என்பதையும் காட்டுகிறது என்றும் அவர்கள் சொல்கிறார்கள்.

இந்த முற்போக்கு சிந்தனையாளர்கள், அநீதி யுள்ளவர்களுக்காக நீதிமானாகிய கிறிஸ்து மரித்தார் என்ற கருத்தைப் பரிகாசம் செய்கின்றனர்; அதாவது வேத வாக்கியங்களின்படியே "**கிறிஸ்து நம்முடைய பாவங் களுக்காக மரித்தார்:**" அதன்படி "**அவருடைய தழும்பு களால் நாம் குணமாகிறோம்**;" "**கர்த்தரோ** (யேகோவா) **நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப் பண்ணினார்.**" (ஏசா. 53 : 5, 6); "**நம்முடைய அக்கிரமங்களுக்காக அவர்** (மரணத்திற்கு) **ஒப்புக்கொடுக்கப் பட்டார்.**" அவர்கள் இந்த வசனங்களையும், இதைப் போன்ற மற்ற வேத வசனங்களின் தொகுப்பையும் விளக்க முயற்சிக்கின்றனர். இதில் தோல்வி அடைந்தபடியால், அவர்கள் தங்கள் கருத்தை தெளிவாக இவ்வாறு சொல்கின்றனர்– அதாவது அப்படிப்பட்ட பாடங்களும், இயேசுவின் மரணத்தின் நோக்கம் பற்றிய அப்படிப்பட்ட கருத்துக்களும், கடந்த காலங்களில் போதுமான அளவுக்கு நன்மையானதாக இருந்திருக்கலாம். ஆனால், நம்முடைய காலத்தின் முற்போக்கான வெளிச்சத்திற்கும், கருத்துக்கும் முன்னால் அது எடுபடாது அல்லது நிற்காது என்று கூறுகின்றனர். ஆனால் கவனமாக குறித்துக் கொள்ளுங்கள், "முற்போக்கான சிந்தனையாளர்கள்" என்று பொய்யாய் அழைக்கப்படுகிறவர்களுடைய முற் போக்கான வெளிச்சத்தைக் குறித்து அவர்கள் பெருமை பாராட்டுவது பூமிக்குரிய வெளிச்சமே. இது அப்படிப்பட்ட அறிவுப்பூர்வமான தத்துவமும், அறிவியலுமாகும், பொய்யாக அவ்வாறு அழைக்கப்படுகின்ற அதற்கு எதிராக நாம் எச்சரிக்கப்படுகிறோம். "**ஓ, தீமோத்தேயுவே, உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்டதை நீ காத்துக் கொண்டு, சீர் கேடான வீண் பேச்சுகளுக்கும், ஞானமென்று பொய்யாய்ப் பேர்பெற்றிருக்கிற கொள்கையின் விபரீதங்**



"நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளேஅவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை." (அப். 4 : 10–12).

**களுக்கும் விலகு.**" (1 தீமோ. 6 : 20). இது பரத்திலிருந்து வருகிற வெளிச்சத்தை – தேவனுடைய வார்த்தையை அசட்டை பண்ணுவது மட்டுமல்லாமல், அதனை எதிர்க்கவும் செய்கிறது. "**நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை**" (அப். 4 : 10-12) என்று அவ்வசனம் சொல்லுகிறது.

"முற்போக்கு சிந்தனையாளர்களாகிய" இப்பரந்த வகுப்பாருடைய விவாதம், அவர்களுடைய சொந்த வாக்குவாதங்களின் நியாயமான முடிவுகளாலேயே முழுவதுமாக கவிழ்க்கப்பட்டுவிட்டது. அவர்கள் இயேசு மரித்தது, நம்முடைய பாவத்துக்கான தண்டனையை செலுத்தும்படியாக அல்லாமல் நம்முடைய தலைவராகவும் மாதிரியாகவும் ஆவதற்காக மட்டுமே என்று கருதுகின்றனர். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, தாவீது மற்றும் இயேசுவின் நாளுக்கு முன்பாக வாழ்ந்து மரித்தவர்கள் அனைவரும் இதே கருத்தில் இதே முறையில் இரட்சிக்கப்பட்டு, மிகப்பெரிய ஆசீர்வாதங்களையும் வெகுமதிகளையும், இயேசு "**வைத்துப்போன மாதிரி**" யிலிருந்து வாழ்ந்து வருகிற கிறிஸ்தவர்களைப் போலவே பெற்றுக் கொள்கிறார்கள் என்று வலியுறுத்துகின்றனர். அப்படியானால் நாங்கள் கேட்கிறோம், இயேசுவின் மாதிரியிலிருந்து என்ன நன்மை ஏற்பட்டிருக்கிறது? முந்தின யுகங்களைச் சேர்ந்த அவர்கள், அதைப்பெற்றிருக்கிறவர்களாகிய நம்மைப் போலவே, அது இல்லாமலே அவற்றுடன் நன்றாக ஒத்துப் போனார்களானால், அவருடைய மரணம் பாவிகளாகிய நமக்கு எதிராக எந்த தண்டனையையோ அல்லது நீதியின் சட்டபூர்வமான கோரிக்கைகளையோ திருப்தி செய்யவில்லையென்றால், கிறிஸ்து மரித்தது வீண் என்று முடிவுக்கு நாம் வரத் தள்ளப்பட்டிருப்போம். தேவன், இந்த போதகர்களைப் போலவே ஞானமுள்ளவராக இருந்து இந்த "முற்போக்கான வெளிச்சம்" என்றழைக்கப்படுவதில் கொஞ்சமேனும் பெற்றிருந்திருப்பாரானால், அவர் தம்முடைய ஒரே பேறான குமாரனை மனுஷனாகவும், "**ஒவ்வொரு மனுஷனுக்காகவும் மரணத்தை ருசிப்பார்க்கும்படிக்கும்,**" அனுப்பியிருந்திருக்க மாட்டார் என்பது குறிப்பாக உணர்த்தப்படுகிறது.

முன்சொல்லப்பட்டவை தேவனுடைய வார்த்தையைப் போதிக்கும் நம்முடைய கருத்து அல்ல என்பதை நம்முடைய கவனமுள்ள வாசகர்கள் கவனிப்பார்கள். இயேசுவின் மரணத்தின் மூலமாக ஆதாமுக்காகவும், அவன் பாவம் செய்த போது அவனுடைய அரையிலிருந்த மனுக்குலத்துக்காகவும் மீட்கும் பொருள் அல்லது சரிநிகரான விலைக்கிரயம் செலுத்தப்பட்டது. இவ்வாறாக, இரட்சிப்பு ஆதாமின் மரணத்திலிருந்து அவனுக்காகவும், அவனுடைய சந்ததி அனைத்துக்காகவும் செலுத்தப்பட்டது என்று நாங்கள் நம்புகிறோம். இயேசுவின் நாளிலிருந்து




**அவர் நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டும், நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக எழுப்பப்பட்டும் இருக்கிறார். (ரோம. 4 : 25)**

(இயேசுவின் காலத்திற்கு பின்பு) ஜீவிக்கிற நாம், நம்முடைய நீதிமானாக்கப்பட்ட மனுஷீக சுபாவத்தை பிரதிஷ்டை செய்வதில் அவருடைய முன்மாதிரியைப் பின்பற்றுவதின் மூலம் பூரண நிலைக்குப் பங்குள்ளவர்களாக மாறுகிறோம். அவர்களுடைய சொந்த கோட்பாட்டை தூக்கியெறிவதற்கு எதிரான விவாதத்தை மட்டும் நாம் பயன்படுத்தினோம்.

ஒரு இனமாக, நாம் ஆக்கினைத்தீர்ப்புக்குட்பட்ட நிலையில் மரணத்தீர்ப்பு அளிக்கப்பட்டவர்கள் – வாதிக்கப்படுவதற்கு அல்ல என்பதை ஒருவன் அறிந்து கொள்ளாதது வரை ஒருவனும் நீதிமானாக்கப்படுதல் பற்றிய சரியான அல்லது முழு கருத்தையும் அறிந்து கொள்ள முடியாது. "**இயேசு நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டு** (மரணத்திற்கு) **நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக எழுப்பப்பட்டுமிருக்கிறார்**" (ரோம. 4 : 25) என்கிற சுவிசேஷத்தால் (மகிழ்ச்சியான நற்செய்தியால்) இப்பொழுது நாம் சந்தோஷப்படுத்தப்படுகிறோம். நாம் நமது தண்டனைக்கான அபராதம் நம்முடைய மீட்பரால் செலுத்தப்பட்டிருக்கிறபடியால் "தேவன் (பிதா) நம்மை மன்னிக்க நியாயமிருக்கிறது" என்று இப்பொழுது நாம் அறிந்து கொள்கிறோம். அவருடைய சொந்த திட்டத்தின்படியே நமக்காக கிரயம் கொடுத்து வாங்கப்பட்ட ஜீவிக்கும் உரிமையை நிறுத்தி வைக்க அவர் அநீதியுள்ளவரல்ல.

ஆதாமுக்குள் எல்லா மனுஷருக்கும் மரணத்துக்கு ஏதுவான தீர்ப்பும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாக எல்லாருக்கும் மரணத்திலிருந்து ஜீவனுக்கான நீதிமானாக்கப்படுதலுமாகிய இந்த நீதிமானாக்கப்படுதல் பற்றிய உபதேசத்தை எவ்வளவு அழகாக ரோம. 5 : 18, 19-ல் பரி. பவுல் எடுத்து காட்டி விளக்கியிருக்கிறார். தண்டனையை யேகோவா ரத்து செய்து திரும்பப் பெறுகிற அடிப்படையில் இல்லாமல், கிறிஸ்து மரித்த அந்த உண்மையை அடிப்படையாகக் கொண்டு இந்த ஒரு முழு விடுதலை அல்லது நீதிமானாக்கப்படுதல்என்ற உபதேசத்தில் அவர் எவ்வளவு ஸ்திரமாக நிற்கிறார்! அவருடைய விவாதம் என்னவெனில், நமக்கு ஆக்கினைத் தீர்ப்பளித்த அதே

யேகோவாவே இப்பொழுது நம்மை பாவத்திலிருந்து விடுவிக்கப்பட்டவர்களாக நீதிமானாக்கப்பட்டவர்களாக அறிவிக்கிறார். நம்முடைய நீதிமானாக்கப்படுதலை நிறைவேற்றும் பொருட்டு, "**அவர் தம்முடைய சொந்தக் குமாரனென்றும் பாராமல், நம் எல்லாருக்காகவும் அவரை ஒப்புக் கொடுத்தார்.**" மேலும் அவர்: "**தேவன் தெரிந்து கொண்டவர்கள் மேல் குற்றஞ்சாட்டுகிறவன் யார்? தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர். ஆக்கி னைக்குள்ளாக தீர்க்கிறவன் யார்?**" என்று அவர் சொல்கிறார். அதன் காரணமாக, தேவனே நீதிமானாக்கும் போது ஒருவரும் நம்மை ஆக்கினைக்குட்படுத்த உரிமையில்லை. அப்படிப்பட்ட ஒருவனிடம் சொல்லுங்கள்: "**கிறிஸ்துவே மரித்தவர்**" (ரோம. 8 : 32-34). அப்படிப் பட்டவனிடம் சொல்லுங்கள், நாம் மரணத்திலிருந்து பாவத்தின் தண்டனையிலிருந்து மீட்கப்பட்டிருக்கிறோம். ஏனெனில், "**கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரித்தார்.**" நாம் விசுவாசத்தால் அவரை நம்முடைய இரட்சகராக ஏற்றுக் கொண்டிருக்கிறோம். அல்லேலூயா! எப்பேற்பட்ட இரட்சகர்!

வேதாகமத்தில் உறுதிப்படுத்தப்பட்டபடி சமாதானம் இரண்டு வடிவங்களில் உள்ளது. தேவனுடன் சமாதானம், மற்றும் தேவ சமாதானம். இவற்றில் முதலாவதானது, நம்முடைய பாவங்களை மன்னிப்பதற்காக தேவன் வாக்குறுதியளித்துள்ள கிறிஸ்துவின் புண்ணியத்தின் மீதுள்ள நம்முடைய விசுவாசத்தின் அடிப்படையில் அவர் நம்மை நேசித்து கிறிஸ்துவின் நீதியை நம்முடைய நீதியாக சாட்டுதல் செய்து, தம்முடன் ஐக்கியத்துக்குள்ளாகவும், சிநேகத்துக்குள்ளாகவும் ஏற்றுக் கொள்கிறார் என்ற விசுவாசத்திலிருந்து வருகிற இருதயம் மற்றும் மனதின் இளைப்பாறுதலாகும்.


ஆகவே, தேவனுடன் சமாதானம் அல்லது தேவனிடத்தில் சமாதானம் என்பது நீதிமானாக்கப் படுதலாகிய சமாதானம். இது பலதரப்பட்ட அம்சங்கள் அடங்கிய பின்னணியைப் பெற்றுள்ளது. இவற்றில் முதல் காரியம், ஒருவனுடைய பாவங்களின் காரணமாக, தேவனுக்கும் பாவிக்கும் இடையில் சமாதானம் இல்லை. பாவமானது தேவனை அவனிடமிருந்தும், அவனை தேவனிடமிருந்தும் விலக்கி வைக்கிறது. தேவனுடைய பரிசுத்தத்தின் காரணமாக, பாவத்தை ஏற்றுக் கொள்ள முடியாததால், பாவி தேவனிடமிருந்து விலகியிருக்கிறான். ஏனெனில் அவனுடைய பாவங்கள் தேவனுடைய பரிசுத் தத்தை வெறுக்கிறது. இயற்கையாகவே தேவனுக்கும் பாவிக்கும் பரஸ்பர பகை உள்ளது. ஆனால் தேவன் பாவிகளை தம்மை நினைத்து வருத்தப்பட வைப்பதால் இந்த பிரிவு நிலையில் அவன் சமாதானமாயிருக்க முடியாது.

இவ்வேளையில், பாவியினிடத்தில் இந்த சமா தானமற்ற மனநிலையைக் கொண்டு வருவதற்கு எல்லா விதத்திலும் தேவன் கிரியை செய்து கொண்டிருக்கிறார். சமாதானமான வீட்டுக்கு படிக்கல் போன்றவற்றை அனுபவிக்க இந்த வழிமுறை அவசியமாயிருக்கிறது. சுவிசேஷமாகிய வாக்குத்தத்தத்தையும் அவனுக்கு அளிக்கிறார். அதாவது, கிறிஸ்துவின் புண்ணியத்தினி மித்தம் அவனுடைய பாவங்கள் அவனுக்கு மன்னிக்கப் படவும், கிறிஸ்துவின் நீதியினிமித்தம் அவன் நீதிமானாக எண்ணப்படவும், வாக்குத்தத்தங்களைக் கொடுத்து, சுவிசேஷத்தின் இந்த வாக்குத்தத்தத்தை முழு இருதயத் தோடும் நம்பி ஏற்றுக் கொள்வானானால், அவனை ஐக்கியத்துக்குள்ளும், சிநேகத்துக்குள்ளும் ஏற்றுக் கொள்கிறார். அவனுடைய தலையிலும், இருதயத்திலும், அதாவது, மனதால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, இருதயத்தால் நம்பப்பட்டு, இந்த வாக்குத்தத்தம் நம்பிக்கையுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதன் அடிப்படையில் செயல்படும் போது, தேவன் பாவியாகிய தனிநபரை மன்னித்து, அவனை நீதிமானாக எண்ணி, அவனைத் தம்முடன் ஐக்கியத்துக்குள்ளும், சிநேகத்துக்குள்ளும் ஏற்றுக் கொள்கிறார். இதை நம்புவதன் மூலமாக, அவன் விசுவாசத்தால் நீதிமானாகுதலை அனுபவித்து, அதன் விளைவாக தேவனோடு சமாதானம் பெறுகிறான். (ரோம. 5 : 1). மனந்திரும்புதலின் பல்வேறு கட்டங்களில் அவன் கடந்து செல்லும்போது அனுபவித்த குழப்பங்கள், கவலைகள், வருத்தங்கள் மற்றும் நம்பிக்கையற்ற உணர்வு ஆகியவைகளிலிருந்து என்ன ஒரு மாற்றம் உணரப்படுகிறது!

இதுதான் தேவனிடத்தில் சமாதானம் அதாவது தேவனுடன் சமாதானம் (peace with God) நீதிமானாக்கப் படுதலின் சமாதானம். தொடக்கத்தில் இது இருவருக் கிடையில் ஏற்படும் அமைதி (சமாதான உணர்வு) என்ற கருத்தில் கவனிக்க வேண்டும். தேவனுக்கும் அவனுக்கும் இடையில் சமாதானம் பெற்றிருக்கிற விசுவாசியின் உணர்வு அவனுடைய உள்ளான மனோபாவத்தைப்போல அவனுடைய சொந்த மனதிலும் இருதயத்திலும் அவை களை சமாதானத்துடன் நிரப்பும் விளைவைப் பெற்றி ருக்கும். நீதிமானாக்கப்படுதலின் சமாதானம் உள்ளும் புறமும் இரு விதத்திலும் உள்ள மன அமைதியாகும்.

ஆனால், நீதிமானாக்கப்படுதலை விட ஆழமான வகை சமாதானம் மற்றொன்று உள்ளது. அதாவது, பிரதிஷ்டையின் சமாதானம். (peace of consecration). வேத வாக்கியங்களின்படி அது "தேவ சமாதானம்" (peace of God) என்று அழைக்கப்படுகிறது. (பிலி. 4 : 7; கொலோ. 3 : 15). இந்த தேவ சமாதானம் என்பது தேவன் தம்முடைய இருதயத்திலும், மனதிலும் கொண்டிருக்கிற இருதயம் மற்றும் மனதின் அமைதியை அடிப்படையில் அர்த்தப்படுத்துகிறது. அவருடைய பங்கில் அப்படிப்பட்ட ஒரு சமாதானத்தை அவர் உடையவராயிருக்கிறபடியால்தான் அவர் சமாதான கர்த்தர் என்று அழைக்கப்படுகிறார். (ரோம. 15 : 33; பிலி. 4 : 9; 2 தெச. 3 : 16).

அதே வகையான இந்த சமாதானம் தேவனுடைய இருதயத்தையும் மனதையும் நிரப்பியிருக்கிறதைப் போல தேவனுடைய ஜனங்களெல்லாருடைய இருதயங்களையும் மனங்களையும் நிரப்புகிற சமாதானமாயிருப்பது அவர்களுடைய சிலாக்கியமாயிருக்கிறது. இது நீதிமானாகுதலின் சமாதானத்திலிருந்து வேறுபட்ட பிரதிஷ்டையின் சமாதானமாகும். இது எப்படி பெற்றுக் கொள்ளப்படுகிறது? இயல்பாக இது பிரதிஷ்டையை குறிப்பிடுகிறது. ஏனெனில் இது பிரதிஷ்டையின் சமாதானம். நீதிமானாக்கப்படுதலின் சமாதானம் நீதிமானாக்கப்படுதலுக்குரிய பிரத்தியேகமான விசுவாசத்தினால் பிறப்பிக்கப்படுவதுபோல, இந்த பிரதிஷ்டையின் சமாதானம், பிரதிஷ்டைக்குரிய பிரத்தியேகமான விசுவாசத்தினால் பிறப்பிக்கப்படுகிறது. மற்றொரு கருத்தில் தேவனே சமாதானத்தின் பிறப்பிடமாக இருக்கிறார். அவரே சமாதானத்தின் மாபெரும் ஊற்றாகயிருக்கிறார். அவருடைய சமாதானத்தை, சமாதானத்தின் பிள்ளைகள் அனைவருக்கும் பெற்றுக் கொள்ளும்படி அவை அவருடைய நீரோடைகளாகப் பாய்ந்தோடி அவர்களுக்கு சமாதானத்தைக் கொடுக்கிறது. சமாதானம் தேவனுடைய ஈவு ஆகும்.




முன் சுட்டிக் காட்டப்பட்டுள்ள சில வசனங்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுவே தேவனுடைய பிரதிநிதியாக தேவனுடன் சமாதானத்திற்கும் மற்றும் தேவ சமாதானத்திற்கும் காரணராக நம்மில் கிரியை செய்து கொண்டிருக்கிறார் என்பதை நிரூபிக்கிறது. அவரே தேவனால் நமக்கு ஞானமும், நீதியும் (நீதிமானாக்கப்படுதலாகவும்-Justification) பரிசுத்தமாகவும், விடுதலையாகவும் மற்றும் அநேக பிற காரியங்களுடன் அவர் நமக்கும் தேவனுக்கும் இடையில் சமாதானத்தையும் (எபே. 2 : 14-17; கொலோ. 1 : 20) மற்றும் தேவ சமாதானத்தை நம்மிலும் உண்டாக்கவும் கிரியை செய்கிறார். (யோவா. 14 : 27). ஆகவே, தேவனுடைய ஜனங்களுக்காக இந்த இரண்டு வகை சமாதானத்தையும் உண்டாக்குவது அவருடைய ஆசாரியத்துவ ஊழியத்தின் ஒரு பகுதியாக இருக்கிறது. தேவனுடைய ஈவாகிய சமாதானம், நமது கர்த்தருடைய ஊழியத்தின் மூலம் நமக்கு அருளப்படுகிறது.

சமாதானத்தை நமக்குக் கொடுப்பவர் என்ற கருத்தில் தேவன் சமாதானத்தின் பிறப்பிடமாயிருக்கிறார். அவருடைய பிரதிநிதியான (ஏஜென்ட்) கர்த்தராகிய இயேசுவின் மூலமாக இந்த வரம் நமக்கு அருளப்படுகிறது. பிரதிநிதியான இயேசுவினால் தேவ வசனத்தின் மூலமாக இதை நமக்குத் தருகிறார். உதாரணமாக ஒருவர் மற்றொருவருக்கு ரூ. 100-ஐ இயந்திரம் கொடுப்பது போல இது கொடுக்கப்படுவதில்லை. இது பிரகாசிப்பிக்கப்படுதல் மற்றும் (வல்லமையளித்தல்) ஆற்றல் ஊட்டும் செயல் முறையில் நமக்குக் கொடுக்கப்படுகிறது. நாம் கர்த்தரிடமிருந்து பெறுகிற இந்த இரண்டு வகை சமாதானத்துக்கும் பொருந்துகிறது.

(1) நீதிமானக்கப்படுதலின் சமாதானம், வார்த்தையின் இரண்டு கருத்திலும் சமாதானமாகும் - அதாவது இரண்டு பிரிவினருக்கிடையே உள்ள மன அமைதி அல்லது வெளிப்புறமான மன அமைதி மற்றும் இந்த வெளிப்புறமான மன அமைதியின் விளைவாக இருதயத்திலும், மனதிலும் கிடைக்கும் மன அமைதியாகும்.

(2) பிரதிஷ்டை செய்தலின் சமாதானம், அதாவது தேவன் தம்முடைய இருதயத்திலும் மனதிலும் கொண்டிருப்பது போன்று நம்முடைய இருதயங்களிலும், மனங்களிலும் அதே வகை சமாதான உணர்வு - மன அமைதியைப் பெற்றிருப்பதாகும்.

நீதிமானாக்கப்படுதலின் இந்த இரண்டு வகை சமாதானமும் நம்மிடம் வருவதற்கு தேவனுடைய வார்த்தையே காரண கருவியாயிருக்கிறது என்பது எவ்வாறு தேவனிடத்தில் மனந்திரும்புதலும் கர்த்தராகிய இயேசுவின் மீதுள்ள விசுவாசமும் நம்முடைய இருதயங்களில் கிரியை செய்து நம்மை நீதிமானாகுதல் நிலைமைக்கு கொண்டு வருகிறது என்று முன் சொல்லப்பட்ட விளக்கத்திலிருந்து தெளிவாகுகிறது. தேவன் நமக்கு தேவ சமாதானத்தை நம்முடைய பிரதிஷ்டையின் ஜீவியத்தில் தேவ வசனமாகிய சத்தியத்தின் மூலமாக அருளுகிறார். ஏனெனில் இது அந்த திட்டத்தைப் பற்றிய நம்முடைய அறிவு, அந்த திட்டத்தில் நம்முடைய ஸ்தானத்தைப் பற்றிய நம்முடைய அறிவு, - இரண்டும் அதனைப் பெற்றுக் கொள்கிறவர்கள் மற்றும், அதன் ஆசீர்வாதங்களைக் கொடுக்கிறவர்களாயிருப்பதால், தேவனுடைய சமாதானத்தை நமக்கு அது கொடுக்கிறது. (யோவா. 14 : 1, 27-28; 16 : 33; லூக். 1 : 79; ரோம. 10 : 15; ஆகிய வசனங்களை ஏசா. 52 : 7; 57 : 19 உடன் ஒப்பிடுக).

தேவன் இயேசுவின் மூலம் நீதிமானாக்கப்படுதலின் சமாதானத்தை, அதன் இரண்டு வடிவங்களிலும், பிரதிஷ்டையின் சமாதானத்தை அதன் தனி வடிவத்திலும் நமக்கு கொடுத்து அதன் தகுந்த வேலையை செய்து முடிப்பதற்கு தேவ வசனமாகிய சத்தியமே கருவியாயிருக்கிறது. இதன் செயல்பாடுகளின் மதிப்பை உணர்வதிலிருந்து பாய்கிற ஊக்கங்கள் அனைத்தும்,




அதன் பயன்பாடு குறைவுகளால் ஏற்படும் தீமைகளை கருத்தில் கொள்வதிலிருந்து ஏற்படுகிற உந்துதல்கள் அனைத்தும், அத்துடன் அதன் பிரயோஜனமான காரியங்களிலிருந்து எழுகிற காரணங்கள் அனைத்தும் அதன் இரண்டு வகை சமாதானங்களை – நீதிமானாக்கப்படுதலின் சமாதானம் மற்றும் பிரதிஷ்டை அல்லது பரிசுத்தமாக்கப்படுதலின் சமாதானத்தை வளர்த்துக் கொள்ள நம்மை தூண்டி எழுப்ப வேண்டும்.

நீதிமானாக்கப்படுதலின் சமாதானத்தை வளர்த்துக்கொள்ள, முதலாவது நாம் தேவன் கிறிஸ்துவின் மரணத்தினிமித்தமாக நம்முடைய பாவங்களை மன்னித்து, தற்காலிகமாக கிறிஸ்துவின் நீதியை நமக்கு சாட்டுதல் செய்து, நம்மை அவருடைய ஐக்கியத்திற்குள்ளாக சேர்த்துக் கொள்கிறார் என்று மனப்பூர்வமாக தொடர்ந்து விசுவாசிக்க வேண்டும். இது நம்மை தேவனுடன் சமாதானத்தைக் காத்துக்கொள்ளச் செய்கிறது மட்டுமல்லாமல், நீதிமானாக்கப்படுதலின் இந்த மூன்று மிகப்பெரிதான நன்மைகளை நாம் பெற்றுக் கொண்டவர்களாயிருக்கிறோம் என்ற உணர்வின் பலனாக இருதயம் மற்றும் மனதில் இளைப்பாறுதலையும் தருகிறது. மேலும், நீதிமானாக்கப்படுதலில் கிடைக்கும் இத்தகைய இருதயம் மற்றும் மனதின் சமாதானத்தைக் காத்துக்கொள்ள, நாம் ஒரு வெற்றி கொள்ளும் போராட்டத்தை, நம்முடைய பாவம் நிறைந்த இயல்புகளுக்கு எதிராகவும், நீதிக்கு இசைவாகவும் மேற்கொள்ள வேண்டியது அவசியமாயிருக்கிறது. இது செய்யப்பட்டால், சற்று முன் சொல்லப்பட்ட நீதிமானாக்கப்படுதலின் மூன்று ஆசீர்வாதங்களும் நம்மை நல் மனசாட்சியில் காத்துக்கொள்ளும், அது நம்முடைய நீதிமானாக்கப்படுதலின் சமாதானத்தை அதிகமாக்கும்.

நம்முடைய பிரதிஷ்டையின் சமாதானத்தை காத்துக்கொள்ளும் பொருட்டு நாம் இந்த காரியங்களையும்கூட, செய்ய வேண்டிய அவசியமாயிருக்கின்றன; ஏனெனில் பிரதிஷ்டையில், நம்முடைய நீதிமானாக்கப்படுதலின் நன்மைகளையும், கடமைகளையும் அனுபவிப்பது முடிவடைவதில்லை; மாறாக, பிரதிஷ்டைக்குரியவைகளையும் இவற்றுடன் சேர்த்துக் கொள்கிறோம். **“இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்”** என்பதைப் பற்றி இன்னும் முழுமையான புரிந்து கொள்ளுதலைப் பெற நம்முடைய பாடத்தை நாம் திருப்பிப் பார்ப்போமாக. இந்த பாடம் தேவனிடத்தில் இருந்து வருகிற ஒரு அழைப்பு என்பதை உணர்ந்து கொள்ளாமல் அநேக கிறிஸ்தவர்கள் தேவனுடன் சமாதானத்துடன் இருப்பதில் மட்டும் மிகவும் சௌகரியமாகவும், திருப்தியாகவும் இருக்கின்றனர். ஆம், நாம் குற்றத்திலிருந்து விடுவிக்கப்பட்டு, நம்முடைய பாவங்களிலிருந்து மன்னிப்பளித்து தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிறோம். தேவனிடமிருந்து கிடைக்கிற இந்த வரத்துடன் (நீதிமானாக்கப்படுதல்), நாம் இந்த அழைப்புக்காக உமக்கு நன்றி சொல்கிறோம் என்று சொல்லவும், இந்த நீதிமானாக்கப்படுதலை பிரதிஷ்டைக்கு ஒரு படிக்கல்லாக பயன்படுத்தவும் நாம் அழைக்கப்படுகிறோம்.

இப்போது நாம் முடிவாக சொல்வதென்னவெனில், நமக்கு தேவன் அருளுகிற பராமரிப்புகளுக்கு சரியான விசுவாசம், சிறிய அளவிலான நீதிமானாக்கப்படுதலில் திருப்தியடையாது, ஆனால் தீவிரமாக முன்னேறி, முழு நீதிமானாக்கப்படுதலையும், பிரதிஷ்டை செய்தலையும் அடைந்து கொள்ள வேண்டும். நீதிமானாக்கப்படுதலை ஒரு குறிப்பிட்ட அளவு பெற்றுக்கொண்டு, அதன் பின்பு அதன் திட்டமிடப்பட்டிருக்கிற நோக்கமான பிரதிஷ்டைக்காக அதனைப் பயன்படுத்தாதிருப்பது, தேவனுடைய கிருபையை விருதாவாகப் பெற்றதாயிருக்கும். (2 கொரி. 6 : 1). தற்காலத்தில் விசுவாசத்தின் மூலமாக நீதிமானாக்கப்படுதலை குறிப்பிட்ட அளவு பெற்றுக் கொள்ளுகிறவர்கள், அதின் முழுமையான கருத்தில் விரிவாக்கப்பட்ட சுவிசேஷ யுக நோக்கங்களுக்காக, பிரதிஷ்டை செய்யாவிட்டால், விசுவாசத்தினால் உண்டாகும் நீதிமானாக்கப்படுதலை (அல்லது திரும்பக் கொடுக்கப்பட்டதாக எண்ணப்பட்டதை) இழந்து போவார்கள். அவர்கள் முழுமையாக பிரதிஷ்டை செய்யாததால், இதன் காரணமாக மீதமுள்ள உலகத்தாருடன் உள்ளபடியேயான திரும்பக்கொடுத்தலைப் பெற்றுக்கொள்வார்கள். பிரதிஷ்டைக்கு முன்னேறாததால் அவர்கள் இன்னும் உலகத்தாரில் ஒரு பகுதியாகவே இருக்கின்றனர், தற்காலத்தில் தேவனுடைய கிருபையை விருதாவாகப் பெற்றவர்களாயிருக்கின்றனர்.

தேவனுடைய திட்டங்களும், நோக்கங்களும் பல்வேறு கட்டங்கள் வழியாக மென்மேலும் வளர்ச்சியடைந்து நிறைவடையும் என்பது குறித்துக் காட்டப்படுகிறது. நாம் இப்போது அவருடைய திட்டங்களில் ஒன்றான, பல்வேறு நோக்கங்களைக் கொண்டிருக்கிற யுகங்களைப் பற்றிய தேவனுடைய ஏற்பாடு செயல்பாட்டில் இருப்பதைக் காண்கிறோம். ***

கிறிஸ்துவுக்குள் அன்பான சத்திய சகோதர சகோதரிகள் யாவருக்கும் எங்கள் மனமார்ந்த புதுவருட வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். தேவன் நம்மை ஆசீர்வதித்து வழிநடத்துவாராக! சங். 65 : 11; 66 : 8,9.

# மிகச் சிறிய தாலந்துகளையும்கூட உண்மையாகப் பயன்படுத்துதல்

Using Even The Small Talents Faithfully BS#761

கேள்வி : கல்வி, பணவசதி, சத்திய அறிவு, தெளிவாகப் பேசும் ஆற்றல் ஆகியவைகளிலுள்ள குறைபாடுகளோடு, மற்ற குறைபாடுகளும் என்னைக் கட்டுப்படுத்துவதை உணரும்போது சில சமயங்களில் நான் சோர்ந்து போகிறேன். மிகவும் அற்பமானதைத்தான் என்னால் செய்ய முடியும் என்று தோன்றுகிறது. என்னுடைய பிரதிஷ்டையில் கர்த்தருக்கு நான் எப்படி உண்மையுள்ளவனாயிருக்க முடியும்? எனக்கு என்ன நம்பிக்கையுண்டு?

பதில் : ''**நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பைப்பாருங்கள், மாம்சத்தின் படி ஞானிகள் அநேகரில்லை, வல்லவர்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை, ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்து கொண்டார்: பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்துகொண்டார். உள்ளவைகளை அவமாக்கும்படி உலகத்தின் இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும், இல்லாதவைகளையும் தேவன் தெரிந்து கொண்டார்: மாம்சமான எவனும் தேவனுக்கு முன்பாகப் பெருமை பாராட்டாதபடிக்கு அப்படிச் செய்தார்**'' (1 கொரி. 1 : 26-29) என்பதை நாம் நினைவுகூர வேண்டும். நம்மில் ஒருவரும் அதிகமாகவோ அல்லது நாம் விரும்புவதையோ செய்ய முடியாது. தேவனிடத்தில் நாம் பெற்றுள்ள ஸ்தானத்தை நிலைநிறுத்திக் கொள்ள உதவிக்காகவும், கர்த்தருடைய புண்ணியத்தால் நம்முடைய குறைபாடுகளை ஈடுசெய்வதற்கும் நாம் அவரையே நம்பியிருக்க வேண்டும்.

வீழ்ச்சியடைந்த நம்முடைய சொந்த மாம்சத்தை நம்பாமல் நமது அன்பானவரின் புயத்தில் நாம் சாய்ந்திருக்கும் போது 2 கொரி. 12 : 9-ஆம் வசனத்திலுள்ள பாடத்தை அவ்வப்போது சிந்திப்பது நமக்கு உதவியாயிருக்கும். நான்கு அல்லது ஐந்து தாலந்துகளுக்குப் பதிலாக ஒன்று அல்லது இரண்டு தாலந்துகளை நீங்கள் பெற்றிருந்தால் சோர்வடைய வேண்டாம். சத்திய வசனத்தை ஜாக்கிரதையோடு படித்து. கைக்கொண்டு, சத்தியத்தை மற்றவர்களுக்கு அறிவித்து, தேவ ஆவி உன்னில் இருப்பதை வெளிப்படுத்துவதற்குரிய நடவடிக்கையை எடு, அப்பொழுது மோசேயிடம் செய்ததுபோல உன்னுடைய கரத்திலுள்ளதையும் தேவன் பயன்படுத்துவார். (யாத். 4-ம் அதிகாரம் பார்க்கவும்). உன்னிடமுள்ள அற்ப மானது எதுவாயிருந்தாலும் அதனை அவருக்காகப் பயன் படுத்து. அவர் அதையும், உன்னையும் ஆசீர்வதிப்பார். ஜனங்கள் வெளித் தோற்றத்தைப் பார்க்கிறார்கள், ஆனால் ''**கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார்.**'' (1 சாமு. 16 : 7).

பைபிள் ஸ்டாண்டர்ட் பத்திரிக்கையின் முன்னாள் ஆசிரியர் களில் ஒருவரான ரேய்மண்ட். ஜி. ஜாலி போதகர் கர்த்தருடைய சிறியரில் ஒருவருடன் தமக்கேற்பட்ட அனுபவத்தை எழுதியிருக்கிறார்.

*கொஞ்ச நாட்களுக்கு முன்பு, பல வருடங்களாகப் படுக்கையிலிருக்கும் ஒரு அன்பான சகோதரனைப் பார்க்கச் சென்றிருந்தேன். அவருடைய ஊழியம் செய்யும் சிலாக்கியங்களில் சுகவீனத்தின் காரணமாக அவருக்குள்ள கட்டுப்பாடுகளைக் குறித்து அவர் வருந்தினார். ஜன்னலுக்கு அருகில் அவருடைய படுக்கையைப் போடச் சொல்லி ஒவ்வொரு காலையிலும், ஒவ்வொரு இரவிலும் ஜனங்கள் வேலைக்குப் போகும் போதும் திரும்பி வரும்போதும், யாராவது ஒருவருக்கு ஏதாவது நன்மையைத் தரும் என்ற நம்பிக்கையோடு ஜன்னல் வழியே ஒரு சத்திய துண்டுப்பிரதியைப் போடுவார்.*

*இந்த காரியத்தோடுகூட சத்தியத்தைப்படிப்பது, விழித்திருப்பது, ஜெபிப்பது ஆகிய மற்ற சிலாக்கியங்களையும் குறித்து அவருக்கு ஞாபகப்படுத்தி அவரை உற்சாகப்படுத்தினோம். (2 தீமோ. 2 : 15; கொலோ. 4 : 2; யாக். 5 : 16); மேலும் ''**விசுவாசிகளுக்கு முன்மாதிரி யாயிருக்கவும்**'' (1 தீமோ. 4 : 12). அவரைப் பார்க்க வருகிறவர் களிடமும், அவரைக் கவனித்துக் கொள்கிறவர்கள்மீதும் (புரோஷியா சத்தியத்தை ஏற்றுக் கொள்ளாதவர்கள்மீது) அவருடைய வெளிச்சத்தைப் பிரகாசிக்கவும் அவருக்கு ஞாபகப்படுத்தினோம். ''**கொஞ்சத்தில் உண்மையுள்ளவன்அநேகத்திலும் உண்மையுள்ள வனாயிருக்கிறான்**'' (லூக். 16 : 10; Z 5740; P'61, pp66-ஐப் பார்க்கவும்) என்ற நமது கர்த்தருடைய வார்த்தையையும் அவருக்கு ஞாபகப்படுத்தினோம். அவர் இவைகளினாலும் மற்ற வேத வசனங்களினாலும் மிகுந்த உற்சாகமடைந்தார். ஏனெனில், ''**ஒருவனுக்கு மனவிருப்பமிருந்தால் அவனுக்கு இல்லாததின்படியல்ல அவனுக்கு உள்ளதின்படியே அங்கீகரிக்கப்படும்.**'' (2 கொரி. 8 : 12).*

ஒவ்வொருவனும், ''**அவனவனுடைய திறமைக்குத்தக்க தாக**'' (மத். 25 : 15) வாயின் வார்த்தையினாலும், அச்சடிக்கப் பட்ட பிரதிகளினாலும், நடக்கையினாலும், மனப்பான்மை யினாலும் அவன் அல்லது அவள் நியாயமாகச் செய்யக்கூடிய அளவுக்குத் தக்கதாக, நம்மை ''**அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங் களை அறிவிக்க**'' (1 பேது. 2 : 9) வேண்டும். இதனை பிரசங்கம் செய்தல், விளக்கப் படங்களுடன் விவரித்து பேசுதல் ஆகியவைகளைத் தவிர மற்றவர்களோடு ''பெரேயன்'' வேத பாடங்கள் நடத்துதல் (எங்கு அல்லது எத்தனைபேர் கலந்து கொண்டார்கள் என்பது முக்கியமல்ல) கலந்துரையாடல்கள், கடிதம் எழுதுதல், கோல்போர்ட்டர், ஷார்ப்ஷூட்டர், தன்னார்வ ஊழியம், இறந்து போனவர்களின் உறவினர்களுக்கு ஆறுதல் கூறும் ஊழியம் (PT 538-ஐப் பார்க்கவும்), மற்றவர்களைக் கூட்டங்களுக்கு அழைப்பது போன்ற பலவழிகளிலும் செய்யலாம். சரியானபடி கவனமாயிருக்கிற ஒவ்வொருவரும் (யோவா. 4 : 35) கர்த்தருக்காகவும், சத்தியத்துக்காகவும், சகோதரர்களுக்காகவும் ஊழியஞ்செய்வதற்கு அவரவர் களுடைய திறமைக்கும் வாய்ப்புகளுக்கும் தக்கதாக ஏராளமான காரியங்கள் இருப்பதைக் கண்டு கொள்வார்கள்.

ஆகவே மனச்சோர்வடைந்து நம்பிக்கையை விட்டு விடாமல் தொடர்ந்தேர்ச்சியாய்க் ''**கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாக**'' (1 கொரி. 15 : 58) ''**விசுவாசத் தின் நல்ல போராட்டத்தைப் போராடவும்**'' ''**நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்ளவும்**'' தொடரவேண்டும். (1 தீமோ. 6 : 12). ''**தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல கர்த்தர் தமக்குப் பயந்த வர்களுக்கு (பயபக்தியாயிருப்பவர்களுக்கு) இரங்குகிறார்.**'' ''**நம்முடைய உருவம் இன்னதென்று அறிவார். நாம் மண்ணென்று நினைவு கூருகிறார்.**'' (சங். 103 : 13, 14). நீங்கள் உண்மையுள்ளவர்க ளென்று காட்ட பெரிய காரியங்களைத்தான் செய்ய வேண்டும் என எண்ண வேண்டாம். அருணோதய கீதங்கள் பக். 165, 168, 295-ல் உள்ள பாடல்கள் உதவியாக இருக்கும். ***

**அறிவிப்பு**

**2015-ஆம் ஆண்டிற்கான நமது கர்த்தருடைய ஞாபகார்த்த பஸ்கா ஏப்ரல் மாதம் 1-ஆம் தேதி புதன்கிழமை மாலை 6.00 மணிக்குமேல் என்பதை அறிவிக்கிறோம்.**




*For more details please Contact:*

**Bro. V. Vincent Jeyakumar**
**Representative of India**
**Laymen's Home Missionary Movement**
32-D, Dr.Solomon Compound, Near Railway Gate,
Nazareth - 628 617,Thoothukudi District, Tamil Nadu, India.
E-mail ID : vincent.v31@gmail.com. Cell : 98949 26629.